www.Padasalai.Net www.Trb.Tnpsc.Com

# காலாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

## பொருளியல்

நேரம்: 3.00 மணி மதிப்பெண்கள்: 90

### பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்வு செய்க: **20×1=20**

1. நீண்டகாலக் கடன் வழங்கும் நிதி நிறுவனம்
   அ) உலக வங்கி ஆ) பன்னாட்டுப் பணநிதியம்
   இ) உலக வாணிக அமைப்பு ஈ) பிரிக்ஸ்
2. ஆசியான் அமைப்பு நிறுவப்பட்ட ஆண்டு
   அ) 1965 ஆ) 1967 இ) 1972 ஈ) 1997
3. அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலை உள்ளடக்கிய இனங்கள்
   அ) புலனாகும் பண்டங்கள் மட்டும் ஆ) புலனாகாத பணிகள் மட்டும்
   இ) அ மற்றும் ஆ ஈ) பண்ட வாணிகம் மட்டும்
4. அயல்நாட்டுச் செலுத்து சமநிலைக் கூறுகள் கீழ்காண்பவற்றில் எவை?
   அ) நடப்புக் கணக்கு ஆ) மைய வங்கி இருப்பு
   இ) மூலதன கணக்கு ஈ) அ, ஆ, இ மூன்றும்
5. மைய வங்கி நாட்டின் ....................அதிகார அமைப்பு
   அ) பணவியல் ஆ) நிதியியல் இ) கூலி ஈ) தேசிய வருவாய்
6. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது.
   அ) ஜூலை 1982 ஆ) ஜூன் 1982 இ) ஜூலை 1992 ஈ) ஆகஸ்ட் 1982
7. இர்விங் பிஷரின் பண அளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு
   அ) 1908 ஆ) 1910 இ) 1911 ஈ) 1914
8. கூலியும் மூலப்பொருட்கள் செலவும் கூடுவதால் பண்டங்களின் பொது விலை மட்டும் அதிகரிப்பது ............... பணவீக்கம் ஆகும்.
   அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்
9. இறுதிநிலை நுகர்வு விருப்பு =
   அ) மொத்த செலவு / மொத்த நுகர்வு ஆ) மொத்த நுகர்வு / மொத்த வருவாய்
   இ) நுகர்வு மாற்றம் / வருமான மாற்றம் ஈ) மேற்காண் எதுவுமில்லை
10. மிகைப்பெருக்கி என்ற கருத்தை முதன் முதலில் பயன்படுத்தியவர்
    அ) J.R. ஹிக்ஸ் ஆ) R.G.D. ஆலன் இ) கான் ஈ) கீன்ஸ்
11. தொன்மைக் கோட்பாட்டின் முதன்மையான இயல்பு
    அ) குறைந்த அளவு வேலைவாய்ப்பு
    ஆ) பொருளாதாரம் எப்போதும் சமநிலையில் இருக்கும்
    இ) தேவை அதன் அளிப்பை உருவாக்குகிறது ஈ) நிறை குறை போட்டி
12. வேலைவாய்ப்பு, வருவாய் பற்றிய கீன்சின் கோட்பாட்டின் அடிப்படை கருத்துரு
    அ) தொகுத்தேவை ஆ) தொகு அளிப்பு
    இ) விளைவுத் தேவை ஈ) இறுதிநிலை நுகர்வு விருப்பம்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



13. கீழ்வருவனவற்றுள் எது தடைபடா ஓட்டக் கருத்துகள்?
அ) சட்டைகளின் எண்ணிக்கை ஆ) மொத்த சொத்து
இ) மாத வருமானம் ஈ) பண அளிப்பு

14. .......... துறையில் செலவு முறையில் நாட்டு வருமானம் மதிப்பிடப்படுகிறது.
அ) கட்டடத் துறை ஆ) வேளாண்மைத்துறை
இ) பணித்துறை ஈ) வங்கித்துறை

15. பொது மட்டத்தில் விலையின் தொடர் உயர்வைக் குறிப்பிடும் கருத்து .......... ஆகும்.
அ) மொத்த விலைக்குறியீடு ஆ) வணிகச்சூழல்
இ) பணவீக்கம் ஈ) நாட்டு வருமானம்

16. புதிய பேரியல் பொருளியலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?
அ) ஆடம்ஸ்மித் ஆ) ஜே.எம்.கீன்ஸ் இ) ராக்னர் பிரிக்சு ஈ) காரல் மார்க்சு

17. MV = PT என்ற சமன்பாட்டை அறிமுகப்படுத்தியவர்
அ) இர்விங் பிஷர் ஆ) J.M. கீன்ஸ்
இ) மார்ஷல் ஈ) மேற்கூறிய அனைத்தும்

18. சென்னை வங்கி துவங்கப்பட்ட ஆண்டு
அ) 1843 ஆ) 1840 இ) 1806 ஈ) 1809

19. மீள் ரெப்போ விகிதம் என்பதன் பொருள்
அ) வணிக வங்கிகளிடமிருந்து வாங்கும் கடனுக்கான இந்திய ரிசர்வ் வங்கி கொடுக்கும் வட்டி வீதம்
ஆ) ரிசர்வ் வங்கி வணிக வங்கிகளுக்கு அளிக்கும் கடனுக்கான வட்டி விகிதம்
இ) அயல்நாட்டுச் செலாவணி விகிதம்
ஈ) நாட்டின் வளர்ச்சி விகிதம்

20. ஆசியான் கூட்டங்கள் ............ ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும்.
அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 5

## பகுதி - ஆ

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்க.
வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளி. 7×2=14

21. "வருமான சூழல் ஓட்டம்" - வரையறு?
22. தொகு அளிப்பின் கூறுகள் யாவை?
23. நாட்டு வருமானக் கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?
24. இறுதிநிலை சேமிப்பு நாட்டம் (MPS) - வரையறு.
25. தேக்க வீக்கம் என்றால் என்ன?
26. வெளி அங்காடி நடவடிக்கை என்பதன் பொருள் கூறுக?
27. பன்னாட்டுப் பொருளியல் என்றால் என்ன?

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

28. எங்கு, எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
29. தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?
30. வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக?

## பகுதி - இ

ஏதேனும் ஏழு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.
வினா எண் 40 கட்டாய வினா. 7×3=21

31. கீன்சின் நுகர்வு சார்ந்த உளவியல் விதியின் கருத்துக்களைக் கூறுக.
32. கீழ்க்காண்பவற்றைச் சுருக்கமாக எழுதுக:
    அ) பருவ கால வேலையின்மை
    ஆ) உடன்பாடில்லா வேலையின்மை
    இ) கற்றோர் வேலையின்மை
33. நாட்டு வருமானம் கணக்கிடுதலில் "இருமுறை கணக்கீட்டு சிக்கலுக்கு என்ன தீர்வு"?
34. முதலாளித்துவத்தையும், சமத்தருமத்தையும் வேறுபடுத்துக?
35. நபார்டின் பணிகள் யாவை?
36. பண அளிப்பினைத் தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
37. பிரிக்ஸ் மாநாடு 2018 இன் நிகழ்ச்சி நிரல் பற்றி எழுதுக.
38. மொத்த நிகர பண்டமாற்று வாணிக வீதத்தை சுருக்கமாக எழுதுக.
39. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்கும் உள்ள வேறுபாடுகளை எழுதுக.
40. சார்க்கின் பணிகளைச் சுருக்கமாக கூறுக.

## பகுதி - ஈ

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்: 7×5=35

41. அ) உலக வங்கியின் பணிகளை வெளிக்கொணர்க.

    (அல்லது)

    ஆ) உள்நாட்டு வாணிகத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்க.
42. அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

    (அல்லது)

    ஆ) ஒரு பொருளாதாரத்தில் பணவீக்கத்திற்கான காரணங்கள், விளைவுகள் யாவை?
43. அ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தி திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை?

    (அல்லது)

    ஆ) ADF, ASF க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரி.

www.Padasalai.Net
Scanned with CamScanner

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



44. அ) நாட்டு வருமானத்தை கணக்கிடுவதால் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

(அல்லது)

ஆ) நடவடிக்கைகள் அடிப்படையில் ஒரு பொருளாதார அமைப்பு செயல்படுவதை விவரி.

45. அ) பெருக்கி இயங்கும் விதத்தினை விவரி.

(அல்லது)

ஆ) ஒப்புமைச் செலவுக் கோட்பாட்டினை விவரி.

46. அ) பணவியல் கொள்கையின் நோக்கங்கள் யாவை? விளக்குக.

(அல்லது)

ஆ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

47. அ) சேயின் அங்காடி விதியினைத் திறனாய்வு செய்க.

(அல்லது)

ஆ) பொருளாதார ஆய்வில், சமூகக் கணக்கிடுதலின் அவசியத்தை விவாதி.

----------

www.Padasalai.Net

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com